# ஆற்றுப்படைகளில் போர்க் கருவிகள்

**முனைவர் ம. தனலெட்சுமி**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி

சங்க இலக்கியங்கள் அகம், புறம் என்று இரு வகைகளாகப் பாகுபடுத்தப் பெற்றுள்ளன. அகம் என்பது காதலை உட்படுத்தியும் புறம் என்பது போரை மையப்படுத்தியும் எழுந்தன. சங்ககால மக்கள் வேட்டையாடுதலின் போதும் காடுகளிலும், மலையுச்சிகளிலும், கொடிய வழிகளிலும் செல்லும் போதும் ஏற்படும் இடர்களைத் தடுக்கவும், அதிலிருந்து தம்மைப் பாதுகாக்கவும், பல்வேறு கருவிகளைப் பயன்படுத்தினர். அத்துடன் வீரர்களாய்த் திகழ்ந்திருந்த பண்டையத் தமிழர்கள் பகைமன்னர்களுடன் போர்புரிய பல்வேறு வகையான கருவிகளைப் பயன்படுத்தினர். இக்கருவிகள் ஆற்றுப்படையில் இடம்பெற்றிருப்பதை விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### போர் - சொற்பொருள் விளக்கம்

'போர்' என்னும் சொல் 'பொரு' என்னும் வேர்ச்சொல்லில் இருந்து தோன்றியதாகும். 'பொரு' அல்லது 'பொருவு' எனில் 'ஒத்திருத்தல்' என்பது பொருள். தமிழர்கள் அக்காலத்தே ஒத்த திறனும் ஒத்த படையும் உடையாரிடம் சண்டையிடுதலையே போர் எனக் கொண்டனர் என்பதற்கு அச்சொல்லே ஆதாரமாகும். பண்டைக்காலத் தமிழகத்தில் பல போர்கள் நடந்துள்ளன. இப்போர்கள் குறித்து 'போர் தொடுப்பதை அறிவிக்கும்' செய்தியாக ஆநிரை கவர்தலும், போரிடும் நாள் குறித்துப் போர் முரசடித்தலும் நோயார், முதியோர் அனைவரும் இடம்விட்டுச் செல்க என அறிவித்தலும் கொலைக்குரிய போரிலும் தமிழர்கள் கொண்டிருந்த அறத்தையே காட்டுகிறது.

> **மனித இன வாழ்வில் போர் என்பது உயிரியல் தேவை அஃது ஒழுக்கங்களை நெறிநிறுத்தி வகைப்படுத்தும் இன்றியமையாத கருவி**[1]

என்பர் அறிஞர் பொன்கீர்த்தி.

மனித வரலாற்றினைப் புரட்டிப் பார்த்தால் வலிய உயிரினங்கள் இவ்வுலகில் நிலைபெற போராடிக்கொண்டுதான் இருக்கின்றன. அந்தப் போராட்டம்தான் காலந்தோறும் போராக உருமாறியது.

> **மனித இன வரலாறே போர் பற்றியது. அதில் சிற்சில குறுகிய கால இடைவெளிகள் தவிர அமைதி நிலவியதில்லை**[2]

என்பார் வின்சென்ட் சர்ச்சில்.

கி.மு. 1496 முதல் கி.பி. 1861 வரையிலான 3357 ஆண்டு வரலாற்றில் 3130 ஆண்டுகள் உலகில் எங்கோ ஓரிடத்தில் போர் நடந்து கொண்டே இருந்தது என்று போரியல் கணக்கெடுப்பு ஒன்று புகலுகிறது. இக்கருத்தின்படி மனிதன் ஓராண்டு அமைதியை அடையவும், அதை அனுபவிக்கவும் பதினான்கு ஆண்டுகள் போரில் ஈடுபட வேண்டியிருந்தது என்பர்.

### போர்க்கருவிகள்

தொல்காப்பியர் போரின் வெற்றிக்குப் பயன்பட்ட வாளுக்குச் செய்யும் வாள்மங்கலத் தினைக்,

> **குடையும் வாளும் நாள்கோள் அன்றி**
> **மடையமை ஏணிமிசை மயக்கமும் கடைஇச்**
> **சுற்றுஅமர் ஒழிய வென்று கைக்கொண்**[3]

எனக் கூறுவதன் வழியும், கணை (அம்பு), வேல் முதலியன துணையாகக் கொண்டு பகைவரை அழிப்பதனைக்,

**கணையும் வேலும் துணையுற பொய்த்தலின்**
**சென்ற உயிரின் நின்ற யாக்கை**
**இருநிலம் தீண்டா அருநிலை வகையோடு**
**இருபாற் பட்ட ஒரு சிறப்பின்றே**[4]

என்றுரைப்பதன் வழியும் பழந்தமிழர்கள் போர்க்கருவிகளைப் பயன்படுத்தியதை அறியமுடிகிறது. படைக்கருவிகளின் வகைகளைத்,

**தானை கடுமுள் சுதனம்**
**படையே துப்பு கமுமுள் ஏதி**
**கார்த்திகை கூர்த்திகை ஆயுதப் பொதுப்பெயர்**[5]

என்று சேந்தன் திவாகரமும்

**தானை படையே படைக்கலங்கருவி**
**யெ.·.கிவை யாயுதம் வேலு மியம்புவர்**
**துப்ப மேதியுஞ் சுதனுமு மாகும்**[6]

என்று பிங்கல நிகண்டும் எடுத்துரைக்கின்றன.

**கைவேல் களிற்றோடு போக்கி வருபவன்**

**மெய்வேல் பறியா நகும்**[7]

என்னும் திருக்குறள் தன் மேல் கொலை புரிய வந்த களிற்றின் நெற்றியில் தன்னுடைய கைவேலைச் செலுத்திய வீரன் அடுத்து வருகின்ற யானை மீது எறிவதற்காகத் தன் மார்பில் பதிந்து நின்ற வேலைப் பறித்துக் கொண்டே மகிழ்வான் என்று கூறுவதில் போரில் வேலைப் பயன்படுத்தியமை தெரியவருகின்றது. சங்கத் தமிழர் பயன்படுத்திய போர்க்கருவிகளை எய்தற்கருவி, எறிதற்கருவி, சுழற்றுதற்கருவி எனப்பிரிக்கலாம். வில், அம்பு போன்றன எய்தற்கருவிகள் ஆகும். வேல், எ.·.கம் போன்றன எறிதற் கருவிகள் ஆகும். வாள், கேடயம் போன்றன சுழற்றும் கருவிகள் ஆகும்.

### ஆற்றுப்படைகளில் போர்க் கருவிகள்

'போர்' என்ற சொல் ஆற்றுப்படை நூல்களில் 'திருமுருகாற்றுப்படையில்' மூன்று இடங்களிலும் 'பெரும்பாணாற்றுப்படையில்' ஓரிடத்திலும் 'மலைபடுகடாமில்' ஓரிடத்திலும் இடம்பெற்றுள்ளன. ''போர்த் தொழில் அரிதாகிய வாயிலினையும்'' (திருமுருகு. 69) என்றும் ''வெற்றியைத் தருகின்றவளும் வெல்போரைச் செய்தவளுமான துர்க்கைக்குப் புதல்வனே'' (திருமுருகு. 258) என்றும் ''போரில் வல்ல வீரனே'' (திருமுருகு. 276) என்றும் திருமுருகாற்றுப்படையில் போருக்கு முக்கியப் படைத்தலைவனான முருகன் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளான். மேலும், ''பலவாகத் திரண்ட தன்மையினையுடைய போர்களினுடைய பெரிய அடியை வாங்கி'' (பெரும்பாண். 237) என்றும் ''மலையை யொத்த போர்களை அடியிலே விழ அழித்துக் கடாவிட்டு'' (மலைபடு. 461) என்றும் போர்க்களத்தினைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. ஆற்றுப்படைகளில் இடம்பெறும் போர்க்கருவிகளை வேல், வில், அம்பு, கேடயம், வாள், கணை என்று வகைப்படுத்தலாம்.

### வேல்

சுடர்விடுகின்ற இலைவடிவமாக உள்ள நெடுவேலைக் கொண்டு முருகன் சூரபத்மனை அழித்தான். இச்செய்தி கந்தபுராணத்தில் விரிவாகக் கூறப்பட்டாலும் திருமுருகாற்றுப் படையில்,

**சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்** (திருமுருகு.46)

என்ற குறிப்புள்ளது. இதேபோல்,

**சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேல்** (அகம்.49:10)

என்று அகநானூறு சுட்டுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. மேலும், ஒருவராலும் அளந்தறியமுடியாத நெடிய செந்நிறமுடைய செவ்வேலினைப் பலவிதமான போர்க் கருவிகளுள் ஒன்றாக முருகன் கையில் வைத்திருந்தான் என்ற செய்தி உள்ளது.

**எய்யா நல்இசை செவ்வேல் சேஎய்** (திருமுருகு.61)

**வேல் கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ!** (திருமுருகு.265)

இதன்வழி பெரும் பகையைத் தாங்கும் இயல்பு உள்ளது வேல் என அறியமுடிகின்றது. இன்றைய காலக்கட்டத்திலும் முருகன் என்ற கடவுளின் அடையாளமாக வேலினை வைத்து வழிபடுவதும், முருகன் கையில் வேல் வைத்திருப்பது போன்ற அடையாளம் இடுவதும் வழக்கத்தில் உள்ளது. சிறுபாணாற்றுப்படையில், வேலினது நுனி போன்ற முன்பகுதியை உடைய ஆம்பல், தாமரை முதலிய நீர்ப்பூக்களின் அரும்புகள் பூத்துள்ள கேணி என்ற குறிப்பில் வேல் பற்றிய செய்தி உள்ளது.

**திறல் வேல் நுதியிற் பூத்த கேணி**
**விறல்வேல் வென்றி, வேலூர் எய்தின்** (சிறுபாண்.172,173)

இதற்கு உரைகூறும் நச்சினார்க்கினியர், நல்லியக்கோடன் தன் பகை மிகுதிக்கு அஞ்சி முருகனை வழிபட்டபொழுது, அவன் அங்குள்ள கேணியில் உள்ள பூவை வாங்கிப் பகைவரை எறியென்று கனவில்கூறி, அப்பூவைத் தன் வேலாக மாற்றியமைத்தார். அதனால்தான் அவ்வூர் வேலூர் எனப் பெயர் பெற்றது என்பார். கடையேழு வள்ளல்களில் ஒருவரான காரி, படைக்கலன்களில் கொற்றவை வீற்றிருப்பாள் என்பதால் இரவலர்க்குக் குதிரையுடன் வேலையும் கொடையாகக் கொடுத்துள்ளான்.

**அழல்திகழ்ந்து இமைக்கும் அஞ்சுவரு நெடுவேல்** (சிறுபாண்.94)

எயினரது அரணில் பகைவர் அஞ்சும்படியாக, அவர்களைக் குத்திக் கூரிய முனை மழுங்கி, புலால் நாறும் வாயையுடைய வேல்களை வரிசையாக வைத்துள்ளனர்.

**ஒன்னாத் தெவ்வர் நடுங்க, ஓச்சி**
**வைந்நுதி மழுங்கிய புலவுவாய் எ.்.கம்** (பெரும்பாண்.119)

**வில்**

பண்டைக் காலப் போர்களில் அனைத்து வகைக் கருவிகளுள் முதன்மையாக விளங்கியது, வில்லென்னும் போர்க் கருவியே ஆகும். மன்னன் பெரும்பாலும் விற்படை, வேற்படை, வாட்படை, மற்படை முதலிய நால்வகைப் படைகளைப் பெற்றிருந்தான். பண்டைக் காலத் தமிழர்கள் விற்கலையில் முதன்மை பெற்றிருந்தனர். மன்னர்களுக்கு வில்வித்தை குலவித்தையாகவே இருந்தது. ஆகையால், சேரநாட்டுக் கொடியில் வில் வடிவமே சின்னமாக இருந்தது. இத்தகைய விற்படையில் கை தேர்ந்த வீரர்கள் விற்கலைஞர்கள் எனப் பெயர் பெற்றனர். ஆற்றுப்படை நூல்களில் வில்லின் பயன்பாட்டினைப் புலவர்கள் தம் வாழ்க்கையோடு இணைத்துக் குறிப்பிடுகின்றனர். சுங்கச் சாவடிகள் நிறைந்த பெரிய வழிகளைப் பாதுகாக்க விற்படைகள் இருந்துள்ளன.

**உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்**
**வில்லுடை வைப்பின் வியன்காட்டு இயவின்** (பெரும்பாண்.81-82)

சேரன் செங்குட்டுவன் தன்னுடைய வெற்றிக்கு அடையாளமாக வடஇமயத்தில் வில் இலச்சினையைப் பொரித்ததை சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது.

**வடபுல இமயத்து, வாங்குவிற் பொறித்த**
**எழுஉறழ் திணிதோள், இயல்தேர்க் குட்டுவன்** (சிறுபாண்.48-50)

**அம்பு**

எய்தவுடன் இலக்கு நோக்கிச் சென்று அப்பிக் கொள்வதாலும், அழகிய பூ வடிவுடையதாலும் அம்பு எனப்பட்டது. அதாவது ‘அப்புதல்’ அம்பு ஆகும். அம்பு பல உறுப்புகளை உடையது. அம்புவின் தலையை, உடு என்றும் அம்பி, குப்பி, புழுகு

என்றும் குறிப்பிடுவர். கணை எனில் திரட்சி. கணைக்கால் எனில் திரண்டகால். கண் +ஐ=கணை என்றாகும். அழகிய கண்ணையுடைய திரண்ட பிடியுடைய அம்பு கணை எனப்படும். உப்பு வணிகர்கள் வாணிபத்திற்காகச் செல்லும்பொழுது ஆறலைக் கள்வர்கள் அம்பு தொடுத்துப் போர் செய்ய வரின் அவரை எதிர்க்கும் வலிமை படைத்தவர்களாய் விளங்கினர் என்று பெரும்பாணாற்றுப்படை கூறுவதிலிருந்து போரின் பொழுது அம்பு என்ற ஆயுதத்தைப் பயன்படுத்தியமை தெரிகின்றது.

**பொருகணை தொலைச்சிய புண்தீர் மார்பின்** (பெரும்பாண். 70)

அதேபோல் எயினரது அரணில் வில்லுடன் அம்பும் பகைவரைக் கொன்ற புலவு நாற்றத்துடன் அடுக்கி வைத்திருப்பர் என்பதை,

**வடிமணிப் பலகையொடு நிரைஇ, முடிநாண்**
**சாபம் சார்த்திய கணைதுஞ்சு வியல்நகர்** (பெரும்பாண்.120-121)

தன் கணை ஒன்றினால் காண்டவ வனத்தைத் தீக்கு இரையாக்கிய வில்லாற்றலில் வல்லவன் அருச்சுணன் என்ற புராணச் செய்தியில் அம்பு பற்றிய குறிப்பு உள்ளது.

**காளரி யூட்டிய கவர்கணைத் தூணிப்** (சிறுபாண்.238)

**வாள்**

போர்க்கருவிகளுள் முக்கியமான சுழற்றுதல் கருவி வாள் ஆகும். பழந்தமிழகப் போர்களில் மன்னர்கள் மட்டுமின்றி மறவர்களும் வாளை மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளனர். பகைவர்களை வெட்டி வீழ்த்தவும், தன் வீரத்தின் பெருமையை மிகுவிக்கவும் வாளை முன்னுதாரணமாகக் கொண்டு போரிட்டுள்ளனர். எனவே, போரில் பயன்படுத்தப்படும் ஆற்றல் மிகு கருவிகளுள் வாள் சிறப்பிடம் பெறுகிறது. உப்பு வணிகர்கள் தங்கள் குழந்தைகளுடன் மந்தியையும் வண்டியில் கொண்டு வரும்பொழுது அதன் கையில் விளையாட்டுப்பொருளாக உள்ள கிளிஞ்சலின் வாய் வாள் போலுள்ளது என்ற குறிப்பு சிறுபாணாற்றுப்படையில் உள்ளது. இதிலிருந்து பகைவரைக் கொல்லும் தன்மையுடைய வாளானது கூரிய முனையுடனும் கிளிஞ்சல் போல இருபக்க வாட்டிலும் கூரிய தன்மை உடையதாக உள்ளது.

**வாள்வாய் எருந்தின் வயிற்றகத்து அடக்கி** (சிறுபாண்.58)

பகைவரை மார்பினும், முகத்திலும் வாளால் வெட்டி வெல்லும் தன்மையை உடைய நல்லியக்கோடன் புலிபோன்ற ஓவியர் குடியில் தோன்றியவன் என்ற குறிப்பின்வழி பகைவரை வெட்டிவீழ்த்த வாளைப் பயன்படுத்தியமை தெரிகின்றது.

**மறுஇன்றி விளங்கிய வடுஇல் வாய்வாள்,**
**உறுபுலித் துப்பின், ஓவியர் பெருமகன்** (சிறுபாண்.121-122)

**வாள்மீக் கூற்றத்து வயவர் ஏத்த** (சிறுபாண்.212)

**கேடயம்**

கேடயம் நீள் வட்டமும், நீள் செவ்வகமும் கொண்ட அமைப்புடையதாகும். இது மார்பையும், அடிவயிற்றையும் பாதுகாக்கும் விதத்தில் சுமார் 3 அடி உயரமும் 2 அடி அகலமும் கொண்டு விளங்கியிருக்க வேண்டும். தோலாகிய கேடகத்தை இடுகு என்று கூறுகின்றனர். போர்க்களத்தில் வீரர்களின் தலை, மார்பு, அடிவயிறு ஆகிய பகுதிகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், பகைவர் எறியும் வேல், அம்பு ஆகியவற்றைத் தடுப்பதற்கும் பயன்பட்டுள்ளது. இதனை, போரின்பொழுது முருகன் ஒருகையில் வேலையும் மற்றொரு கையில் கேடயத்தையும் சுழற்றிப் போரிட்டான் என்று திருமுருகாற்றுப்படை சுட்டுகின்றது.

**... ... இருகை**
**ஐஇரு வட்டமொடு எ∴குவலம் திரிப்ப** (திருமுருகு.110-111)

**முடிவாக**

வேல், வில், அம்பு, வாள், கேடயம் ஆகியவை ஆற்றுப்படை நூல்கள் சுட்டும் போர்க்கருவிகளாகும். இக்கருவிகளைப் பயன்படுத்தி பண்டையத் தமிழர்கள் வீரம் மிக்க மறவர்களாக வாழ்ந்துள்ளனர் என்பது பெறப்படுகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. அரிமதி தென்னகன், புறநானூறு காட்டும் புதுமைகள், ப.40
2. அரிமதி தென்னகன், புறநானூறு காட்டும் புதுமைகள், ப.40
3. இளம்பூரணர், தொல்காப்பியம், ப.384
4. இளம்பூரணர், தொல்காப்பியம், ப.382
5. சேந்தன் திவாகரம், ப.140
6. பிங்கல நிகண்டு, ப.1604
7. பரிமேலழகர், குறள் எண். 774

**துணைநூல் பட்டியல்**


1. **அரிமதி தென்னகன் புறநானூறு காட்டும் புதுமைகள்,** இலக்குமி நிலையம், 10, காசித் தெரு, இராயப்பேட்டை, சென்னை.
2. **இளம்பூரணர் (உ..ஆ) தொல்காப்பியம் - பொருளதிகாரம்,** சாரதா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை. மே-2005.
3. **சுப்பிரமணியன் ச.வே. சங்க இலக்கியம் மூலமும் தெளிவுரையும்** (பத்துப்பாட்டு) மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 2010.
4. **பரிமேழலகர் (உ..ஆ), திருக்குறள்,** சாரதா பதிப்பகம், சென்னை, 2009.
5. **பரிமேழலகர் (உ..ஆ), சேந்தன் திவாகரம்,** கழக வெளியீடு, திருநெல்வேலி, 1950.
6. **பரிமேழலகர் (உ..ஆ), பிங்கல நிகண்டு,** கழக வெளியீடு, சென்னை, 1968.